# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 198/2018/பே
ஆணை நாள் 17 –12–2018

திரு.மு.பூங்காவனம்,
19, 5–வது தெரு, சி.செக்டர்,
வி.ஜி.ராவ் நகர்,
தாராபடவேடு,
வேலூர்–7.

–– முறையீட்டு மனுதாரர்.

முன்னாள் செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

–– எதிர் மனுதாரர்.

ஆணை.

வேலூர் மாவட்டம், தாராபடவேடு, எண். 19, 5–வது செக்டர், வி.ஜி.ராவ் நகர் பகுதியினைச் சேர்ந்த, திரு.மு.பூங்காவனம், என்கிற முறையீட்டு மனுதாரரின் 07.09.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.09.2018 அன்று பெறப்பட்டு, மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 198/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், வேலூர் மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலருமான திரு. ம.மலர்மாறன், வேலூர் மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த போது பல்வேறு முறைகேடுகள் செய்துள்ளதாகவும், வேலூர் மாநகராட்சி பகுதியில் முத்துமாரியம்மன் கோவில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிற்கு எதிரில் கட்டியுள்ள அவரது வீட்டிற்கு வரைபட அனுமதி பெறப்பட்டதாகவோ, வரி விதிப்பு செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை எனத் தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

26.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம், மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, பனப்பாக்கம் முன்னாள் செயல் அலுவலரான திரு.ம.மலர்மாறன் என்பவருக்கு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, எதிர் மனுதாரரான பனப்பாக்கம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.ம.மலர்மாறன் தனது நாளிடப்படாத கடிதம் மூலம் தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

26.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான நேரடி விளக்கத்தினை பதிவு செய்யும் பொருட்டு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர், மற்றும் எதிர் மனுதாரரான திரு.ம.மலர்மாறன், பனப்பாக்கம் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது 29.10.2018 நாளிட்ட அறிக்கையில், பனப்பாக்கம் பேரூராட்சி, 6.5 ச.கி.மீ பரப்பளவையும், 2011–ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 11,536 எனவும், 12.818 கி.மீ நீள சாலையும், 12.818 கி.மீ வடிகால், ஒரு பேருந்து நிலையம் மற்றும் 8 பொதுக் கழிப்பறைகள் உள்ளதாகவும், மேற்படி பகுதிகளை பொது நலன் கருதி அனைத்து பகுதிகளில் உள்ள குப்பைகள் அகற்றுதல் மற்றும் சுத்தம் செய்தல், கழிவறைகளை சுத்தம் செய்தல், மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான பணிகளை செய்யவும் இது போன்ற அத்தியாவசிய பணிகளுக்காகவும் பொது நலன் காக்கவும் பேரூராட்சி மூலம் நாள் ஒன்றுக்கு 80 கிலோ முதல் 100 கிலோ வரை சுண்ணாம்புத்துள் பயன்படுத்தப்படுவதாகவும், பேருந்து நிலையம் மற்றும் கழிப்பிடங்களை சுத்தப்படுத்த தேவையான பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைப்படும் அளவிற்கு வாங்கி பயன்படுத்துவது வழக்கமான பணி எனவும், மேலும் மேற்படி பொருட்கள் வாங்கப்பட்ட சீனு டிரேடர்ஸ் நிறுவனம் முறையே தமிழக அரசால் பதிவு பெற்ற நிறுவனம் எனவும் அந்நிறுவனத்திற்கு ஆண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு பொது சுகதாரப் பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பனப்பாக்கம் பேரூராட்சியில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 8 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாகவும், அக்குடிநீர் முழுவதும் குளோரினேஷன் செய்து விநியோகம் செய்யப்படுவதால், மேற்படி பணிக்கு பிளீச்சிங் பவுடர் தேவைப்படுவதாலும், மேலும் பேரூராட்சியில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யவும் டெங்கு மஸ்தூர்கள் மூலம் வீடுகளில் உள்ள குடிநீர் தொட்டிகளில் கொசுப்புழு வராமல் தடுக்கவும் நாள் ஒன்றுக்கு சுமார் 15 முதல் 25 கிலே வரை பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்படுவதாகவும், மேலும் டெங்கு கொசு மற்றும் இதர கொசு ஒழிப்பிற்காக சுழற்சி முறையில் பேரூராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் கொசு மருந்து வாங்கி பயன்படுத்தப்படுவதாகவும், இவையனைத்தையும் வாங்கி முறையாக இருப்பு பதிவேட்டில் பதிந்து விநியோகம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள செலவினங்கள் யாவும் பேரூராட்சியின் அடிப்படை பணிகளுக்கான செலவினங்கள் என்பதையும், அவை முறையே ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றும், பேரூராட்சி மன்ற தனி அலுவலரின் அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே கொள்முதல் செய்து இருப்பு பதிவேட்டின்படி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், இதில் நிதி முறைகேடு ஏதுமில்லை எனவும் பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

26.10.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி, இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான வேலூர் மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் 7/2017 முதல் பனப்பாக்கம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக 29.10.2018ல் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சீனு டிரேடர்ஸ் நிறுவனம் தமிழக அரசால் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எனவும், அந்நிறுவனத்திடம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பொது சுகாதார பொருட்கள் வாங்கி உபயோகப்படுத்தி வருவதாகவும், அனைத்து பொருட்கள் வாங்கிய விவரம் பேரூராட்சி இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு, தேதி வாரியான பயன்பாடு குறித்த விவரங்களும் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் பேரூராட்சி மன்றத் தனி அலுவலரின் அங்கீகாரம் பெற்று அதன் அடிப்படையிலேயே கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் எவ்விதமான முறைகேடும் இல்லை எனவும் தெரிவித்தார். தனது தந்தை பேரூராட்சி வரி வசூலிப்பாளாராக இருந்தார் எனவும், முறையீட்டு மனுதாரர் தனது தந்தையின் நண்பர் என்ற முறையில் தான் இப்பேரூராட்சியில் பணியில் சேர்ந்ததும் முறையீட்டு மனுதாரரை போய் சந்தித்ததாகவும், புகாரில் குறிப்பிட்டுள்ள ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை தற்போது நடைபெற்று வருவதாகவும் இது இன்னும் ஒரு வாரத்தில் நிறைவு பெற்றுவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

26.10.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2018ல் ஆஜரான வேலூர் மாவட்டம், பனப்பாக்கம் முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.ம.மலர்மாறன் தனது வாக்குமூலத்தில், தான் 05.07.2017 முதல் 30.04.2018 வரை பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் திரு.மு.பூங்காவனம் ஒரு முன்னாள் ஓய்வு பெற்ற வரித் தண்டலர் எனவும், இவர் வரித்தண்டலர்களை எல்லாம் அழைத்து ஒரு Association தானாக அமைத்து ஒவ்வொரு செயல் அலுவலரும் பணி மாறுதலில் செல்லும் போது அவர் காலத்தில் செலவு செய்த பற்றுச் சீட்டுகள் மற்றும் பிற விவரங்களையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டறிந்து புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், மனுவில் குறிப்பட்டுள்ளபடி வேலூர் மாநகராட்சி பகுதியின் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு எதிரில் தனது வீடு உள்ளதாகவும், கட்டிட வரைபட அனுமதி, அப்போது நகராட்சியாக இருந்த தாரபடவேடு நகராட்சியிடம் கட்டிடம் கட்ட 20.12.2010ல் பெறப்பட்டதாகவும், தனது மனைவி பெயரில் முறையிட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 2009ல் வாங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளதுடன், தாரபடவேடு நகராட்சி தற்போது வேலூர் மாநகராட்சியுடன் 2011 முதல் இணைக்கப்பட்டுள்ளதாகவும், தான் வீடு கட்டுவதற்கு துறை அனுமதி எதுவும் வாங்கவில்லையெனவும், அச்சமயத்தில் தனது மனைவி கிருஸ்துவ கல்லூரியில் பணிபுரிந்ததாகவும், கடன் வாங்கிய வகையில் ரூ.8,344/– LIC யிலும், பின்பு இதை இந்தியன் வங்கி கடனாக மாற்றம் செய்யப்பட்டு மாதா மாதம் தவணை கட்டிக் கொண்டு வருவதாகவும், தனது ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்வதாகவும், தான் கடன் பெறுவதற்கு எந்த அனுமதியும் துறையில் பெறப்படவில்லையெனவும், தனது வீட்டிற்கு தன் மனைவியின் பெயரில் வீட்டு வரி விதிப்பு செய்யப்பட்டு ரூ.571/– சொத்து வரியாக செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சீனு டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து பேரூராட்சி பயன்பாட்டிற்கு சுண்ணாம்பு, கொசு மருந்து, பினாயில், பிளீச்சிங் பவுடர் போன்றவை ஆண்டு முழுவதும் வாங்கியுள்ளதாகவும், பிற நிறுவனங்களிடமிருந்து மூன்று விலைப்பட்டியில் பெறப்பட்டு, அவற்றில் குறைந்த விலை உள்ள சீனு

டிரேடர்ஸ் நிறுவத்திடம் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும், இதில் எந்த தவறும் நடக்கவில்லையெனவும், எல்லா செலவினங்களும் பனப்பாக்கம் பேரூராட்சி மன்ற தனி அலுவலரின் ஒப்புதல் பெறப்பட்டு முறையாகவே செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், தவறுகள் நடந்திருந்தால் உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவினரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் எனவும், தற்போது உள்ளாட்சி நிதி தணிக்கை நடந்து கொண்டிருப்பதாகவும், புகார் மனு குறித்து தனது விளக்கத்தினை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், அத்துடன் தாரபடவேடு நகராட்சியில் 20.12.2010ல் கட்டிடம் கட்ட பெறப்பட்ட அனுமதி கடிதம், LIC யில் கடன் வாங்கிய கடிதம், மற்றும் இந்தியன் வங்கியில் கடன் வாங்கிய கடிதம் மற்றும் அதற்கு தன்னால் மாதா மாதம் ரூ.8,344/– தவணை கட்டி வரும் பட்டியல் ஆகியவற்றின் ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் ஒய்வு பெற்றாலும், பில் கலெக்டர்களால் உருவாக்கிய Bill Collector's Association என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தி அதற்கு தலைவராக இருப்பதாகவும், பனப்பாக்கம் பேரூராட்சிக்கு யார் செயல் அலுவலராக வந்தாலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக வேலூரில் யார் பதவி ஏற்றாலும் மனுதாரரைப் பார்த்து மரியாதை செய்யவேண்டும் எனவும், அப்படி மரியாதை செய்யாத பட்சத்தில் அவர்கள் பணி மாறுதலில் சென்ற பிறகு அவர்கள் குறித்த தகவல்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டு புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், முன்பு இருந்த செயல் அலுவலர் பணி மாறுதலில் சென்ற பின்பு அவரை பற்றி தகவல்களை பெற்று புகார் எழுதுவார் எனவும், தான் பணியில் சேர்ந்தவுடன் ஒன்றரை ஆண்டிற்கான செலவு சீட்டுகளை கேட்டதாகவும், தான் மொத்தமாக மனித சக்தியினை வீணடிக்கும் நிலையில் பதில் தர முடியாது என தெரிவித்ததாகவும் அதற்காகத்தான் முறையீட்டு மனுதாரர் உண்மைக்கு மாறன புகார்களை தன்மீது அளித்துள்ளார் எனவும், 2014ம் ஆண்டு தனது வீடு கட்டி முடிக்கப்பட்டதாகவும் தான் வீடு கட்டி முடித்தபின்னர் வரி விதிப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகவும், யாரும் நடவடிக்கை எடுக்காத நிலையில் திரும்ப தான் முயற்சி செய்து மாநகராட்சி பில் கலெக்டர் மூலம் அதற்குரிய வரி விதிப்பு செய்து கொண்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

06.12.2018 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகாத முறையீட்டு மனுதாரர் தனது வயோதிகம்/உடல்நிலை காரணங்களை குறிப்பிட்டு தனது விளக்கத்தினை 29.11.2018 நாளிட்ட கடிதம் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, எதிர் மனுதாரரான திரு.ம.மலர்மாறன் அவர்களின் விளக்க அறிக்கை, பனப்பாக்கம் பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளது புலனாகிறது. தனது புகார்களுக்கான குறிப்பான ஆதார ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி முறையீட்டு மனுவிற்கான பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களின்படி மேற்படி செலவினங்கள் யாவும் முறையாக பேரூராட்சி மன்ற தனி அலுவலரின் ஒப்புதல் பெறப்பட்டும், பெறப்பட்ட பொருட்களை உரிய முறையில் இருப்பு பதிவேட்டில் பதிந்து பயன்படுத்தி வருவதும் அறிக்கைகள்/ஆவணங்களின் மூலம் உறுதியாகிறது. எனவே முறையீட்டு

மனுதாரரது புகார்கள் தகுந்த ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என தள்ளுபடி செய்யப்படுகிறது.

இருப்பினும் எதிர் மனுதாரரன திரு.ம. மலர்மாறன், செயல் அலுவலர் தன் மனைவி மீது வாங்கியுள்ள வீடு மற்றும் சொத்துக்களுக்கான துறையின் அனுமதி பெறப்படாமைக்கான விளக்கத்தினை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு பரிந்துரைத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. மு.பூங்காவனம்,
19, 5–வது தெரு, சி.செக்டர்,
வி.ஜி.ராவ் நகர்,
தாராபடவேடு,
வேலூர் – 7.

2.செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்.